1973 ஆகஸ்ட் 7]

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, நீண்ட தூர எக்ஸ்பிரஸ் பஸ்களிலே சில நேரம் பேருந்துகள் பழுதாகி விடுகின்றன, டயர் வெடித்து விடுகிறது, சீட்டுகள் வசதிக் குறைவாக இருக்கின்றன. சீட்டுகளை 3, 2 என்று வைத்திருக்கிறார்கள். பழுதுகளை நீக்கி, 2, 2 என்று சீட்டுகளையும் குறைத்து பேருந்துகளைவிட அரசாங்கம் உடனடியாக வேண்டிய ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, சீட்டுகளைப் பொறுத்தவரையிலே குறைத்து, அதிக வசதிகளைப் பயணிகளுக்கு அளிக்க வேண்டுமென்ற அடிப்படையிலே, 3, 2 என்று இருப்பதை 2, 2 என்கின்ற அளவிலே அமைக்கலாம் என்று அரசு திட்டமிட்டு, அப்பணி படிப்படியாக மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தக் கஷ்டங்கள் இனிமேல் இருக்காது. புதிய பேருந்துகளை விடுவதில் போதுமான அளவுக்குப் பேருந்துகள் கிடைக்காத காரணத்தினால் பழைய பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. கிட்டத்தட்ட 48 பேருந்துகள் மூன்றாண்டுகளுக்கு மேலாக ஓடிக்கொண்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. கூடிய விரைவிலே அவைகளும் மாற்றியமைக்கப்படும்.

பள்ளபட்டியில் விரைவுப் பேருந்து பயணச்சீட்டு பதிவு அலுவலகம்

*70 வினா—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளபட்டி நகரில் அரசுப் போக்குவரத்துப் பேருந்துகளுக்கு முன்கூட்டியே பயணச் சீட்டு அளிக்க Booking Stall அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : சென்ற கூட்டத் தொடரில் சென்னையிலிருந்து பள்ளபட்டி வழியாகப் பழனிக்கு ஒரு துரிதப் பேருந்து விடுவதாக வாக்குறுதி தந்தார்கள். அது இதுவரை நடைமுறைக்கு வரவில்லை. கடந்த 2 ஆண்டுகளாக உள்ள அந்தக் கோரிக்கையை அமைச்சர் அவர்கள் இனியாவது கவனிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கொடுத்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும்.

Building for Hindu Religious Endowments Office at Kancheepuram

* 71 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to construct a building for the Office of the Assistant Commissioner, Hindu Religious and Charitable Endowments Department at Kancheepuram; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) & (இ) இந்து சமய அற நிலைய ஆட்சித் துறை உதவி ஆணையர், துணை ஆணையர் ஆகியவர்களுக்குக் குடியிருப்புகள் மற்றும் அலுவலகம் புதிதாகக் கட்டுவதற்கான பணித் திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளது. விஷ்ணு காஞ்சி சர்வே எண். 262-ல் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகத்திற்குப் பின்புறம் இடம் தெரிந்தெடுக்கப்பட்டு அதற்காக ஒரு மதிப்பீடும் ரூ. 1,53,000-க்கு ஒப்பளிக்கப் பட்டுள்ளது; கட்டிட வேலைக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கேட்கப் பட்டு பரிசீலனையில் இருக்கின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: தலைவர் அவர்களே, ஒவ்வொரு இடத்திலேயும் அசிஸ்டென்டு கமிஷனருக்காகத் தனியாகக் கட்டிடத்தைக் கட்டி பணத்தை முடக்க வேண்டிய அவசியம் இருக்கிறதா? அரசாங்க இலாகாக்கள் இருக்கின்ற கட்டிடத்தை இந்த இலாகா தனக்குப் பயன்படுத்துவதிலே என்ன கஷ்டம் இருக்கிறது என்பதை அரசு தெரிவிக்குமா? இப்படி அதிகாரி களுக்கு வீடு கட்டுவதுடன் கோயில் சிப்பந்திகளுக்கு வீடு கட்டும் திட்டம் ஏதாவது அரசு தயாரித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, பண வசதி உள்ள கோயில்களில் சிப்பந்திகளுக்குக் குடியிருப்பு வசதி செய்யப்பட்டுள்ளது, செய்துகொண்டு வருகிறோம். ஆனால், வாடகைக் கட்டிடங்களில் உள்ள அலுவலகங்கள் அல்லது குடியிருப்புகளுக்கு அதிகப்படியான வாடகையை நாளுக்கு நாள்